# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அன்னூர்

07.07.2025 அ.வ.எண்.324/2023 DW–1

| | |
|---|---|
| பெயர் | ரவீந்திரன் |
| த.பெ. | பழனிச்சாமி |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். இந்த வழக்குச் சொத்தானது க.ச.எண். 176/1, 173 என்று சொன்னால் சரிதான். வாதிகளுக்கு அந்த சொத்து பரம்பரைச் சொத்து என்றால் சரிதான். நாங்கள் அதை கிரையம் பெற்றவர்கள் என்று சொன்னால் சரிதான். 25.03.1950 ல் வாதிகளின் தாத்தா குமாரகவுண்டருக்கு தாவா சொத்து மற்றும் வேறு சொத்துக்கள் பாக பத்திரத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வாதிகளுக்கு அவர்களது தாத்தாவிற்கு பாக பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் அதில் எனக்கு பாத்தியம் உள்ளது. வாதிகளின் குமாரகவுண்டர் என்பவர் OS No. 794/1932 என்ற வழக்கினை என் தாத்தா வேலப்பக்கவுண்டர் என்பவர் மீது தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அதில் 09.03.1935 ல் குமார கவுண்டருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. எனக்கு சாதகமாக தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.5** ல் கிணற்றில் எனக்கு தண்ணீர் எடுத்துக் கொள்ள மட்டும் தான் பாத்தியம் என்றும் நிலத்தில் பாத்தியம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு தான் காணப்படுகிறது ஆனால் எனக்கு அதில் பாத்தியம் உள்ளது. அதே போல் மேற்படி **வா.சா.ஆ.5** ல் க.ச.எண். 173 காலையில் கிழபுறமாக ஊருக்கு போகும் வண்டிப்பாதையில் வாதிகளுக்கு பாத்தியம் உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். க.ச.எண். 176/1 ன் மேல்புறமாக கிணற்றினை ஒட்டி தென்வடல் தடம் ஒன்று உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் அகலம் என்ன என்றால் சுமார் 21 அடி இருக்கும். அந்த தடத்தில் தான் எனக்கு மின் கம்பம் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. அங்குள்ள இரண்டு கம்பங்களில் எதில் இருந்து எனக்கு கொடுத்தாலும் சரிதான் என்று தான் கொடுத்துள்ளேன். நான் கம்பி இழுக்க மட்டும் தான் கேட்டுள்ளேன். ஆனால் கம்பம் அமைக்க கேட்கவில்லை. பொது இடமாக இருந்தாலும் மின் கம்பம் அமைக்க அனுமதி வாங்க வேண்டும் என்றால் அவர்கள் கம்பி இழுத்த போது என்னிடம் வாங்கவில்லை அதனால் நான் வாங்கவில்லை. அது போல் நான் வாதிகளிடம் அனுமதி வாங்கவில்லை என்பதால் கம்பி இழுக்க வாதிகள் ஆட்சேபணை செய்தார்கள் என்றால் ஆமாம்.

02.03.2021ல் நான் மின் கம்பம் அமைக்க முயற்சித்தேன் என்றால் சரிதான். கூட்டுப்பங்குதாரர்களிடம் அனுமதி வாங்கவில்லை என்பதற்காக வாதிகள் ஆட்சேபணை தெரிவித்தார்கள் என்றால் தவறு. க.ச.எண். 173ல் உள்ள கிழகோட்டு பாதையில் ஊர் மக்கள் கெஞ்சக்கிணற்றுக் செல்ல பாத்தியம் என்றால் அனைவருக்கும் உண்டு. 1935ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக ஏதேனும் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் பாட்டனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். என் பாட்டனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் அது எனக்கு தெரியாது.

2ம் வாதியின் தகப்பனார் ஆறுமுகம் என்பவர் திருப்பூர் வருவாய் கோட்டாச்சியர் அவர்களுக்கு என் பெயரில் உள்ள பட்டாவை இரத்துசெய்து கொடுக்கச் சொல்லி மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதில் நீதிமன்றத்தின் தீர்ப்பினை குறிப்பிட்டு அந்த மனுவின் எதிர்மனுதாரரான எனக்கு பூமியை பற்றி எனக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்று **பி.சா.ஆ.7** உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட உத்தரவின் தொடர்ச்சியாக மனுதாரர் கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று சொன்னால் எனது பெயரினை நீக்கம் செய்ய உத்தரவிட முடியாது என்று குறிப்பிட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் க.ச.எண். 177/1G2 என்ற காலைக்கு தான் மின் இணைப்பு கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த காலைக்கும் வாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வாதியின் அனுமதி இல்லாமல் க.ச. எண். 176/1 என்ற காலையில் உள்ள சொத்திற்கு மின் இணைப்பு பெற பொது இடத்தின் வழியாக மின் இணைப்பு கம்பி கொண்டு செல்ல எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் க.ச.எண். 177ல் உள்ள கோழிப்பண்ணைக்கு வாதிகள் பொது இடத்தின் வழியாக மின் இணைப்பு கம்பி எடுத்துச் செல்ல என்னிடம் வாய்மொழியாக மின் துறை அதிகாரிகள் அனுமதி கேட்ட போது நான் எடுத்துக் கொள்ள சொல்லிவிட்டேன். ஆனால் தற்போது அவர்கள் தான் பொது இடத்தில் எடுத்து செல்ல எனக்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். க.ச.எண். 176/1ல் மின் கம்பி எடுக்க உரிமை இல்லை என்றும் க.ச.எண். 177ல் உள்ள தடத்தினை நான் ஆக்கிரமிக்க முயற்சிக்கறேன் என்று சொன்னால் தவறு. நான் எந்த இடையூறும் செய்யவில்லை. அதனால் வாதிகள் கோரியவாறு வழக்கு அனுமதிக்க வேண்டும் என்று சொன்னால் தவறு. எனக்கு க.ச. எண். 176/1ல் எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் வாதிகள் ஆட்சேபணை செய்கிறார்கள் என்று சொன்னால் தவறு. நான் வழக்கிறக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு.

Sd/−V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.